பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 01 வியாழக்கிழமை (13-02-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 78

# இந்தியக் கடற்படையினர் கச்சதீவில் மீண்டும் ரோந்து!

## கொழும்பு வட்டாரங்களில் அதிருப்தி

கொழும்பு, பெப்ரவரி 13

இலங்கைக்குச் சொந்தமான கச்சதீவைச் சுற்றிவரவுள்ள கடற் பிராந்தியத்தில் இந்தியக் கடற்படை நீண்ட காலத்தின் பின்னர் மீண்டும் தனது ரோந்துப் பணிகளைத் தொடங்கியுள்ளது.

இது குறித்து கொழும்பு அரசாங்க வட்டாரங்களில் பெரும் அதிருப்தி நிலவுகிறது.

கச்சதீவு சம்பந்தமாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இருந்த பிணக்கு ஒப்பந்தம் மூலம் தீர்க்கப்பட்டு அது இலங்கைக்குச் சொந்தமாக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கடந்த சுமார் பத்து வருடங்களாக இந்தியக் கடற்படை கச்சதீவு கடற்பகுதியில் தனது ரோந்துப் பணியை நிறுத்தியிருந்தது.

இலங்கைக் கடற்படையினர் மட்டுமே ரோந்து புரிந்து வந்தனர். அவ்வப்போது இந்திய மீனவர்களுக்குத் தொல்லை கொடுத்தும் வந்தனர்.

அதன் விளைவாகக் கச்சதீவைத் திரும்பப் பெறும்படி தமிழக முதலமைச்சர் செல்வி

[6ஆம் பக்கம் பார்க்க]

# முஸ்லிம் தீவிரவாதிகளுடன் பாக். பொலீஸார் மோதல்!

ஸ்ரீநகர், பெப். 13

இந்திய - காஷ்மீர் எல்லையைக் கடக்க முயன்ற முஸ்லிம் தீவிரவாதிகளும் அவர்களை தடுக்க முயன்ற பாகிஸ்தான் பொலீஸாரும் மோதிக்கொண்டதில் குறைந்தது ஐந்து பேர் உயிரிழந்தனர்.

அவர்களில் இருவர் பொலீஸார் என்றும் இருவர் தீவிரவாதிகள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் அக்கலவரத்தில் 65 பேர் படுகாயமடைந்தனர்.

மோதலின்போது பொலீஸாரிடமிருந்து தீவிரவாதிகள் துப்பாக்கிகளைப் பறித்தனர் என்றும் சில பொலீஸாரைத் தீவிரவாதிகள் பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்றனர் என்றும் செய்திகள் கூறுகின்றன.

மோதலில் காயமடைந்த அல்லது உயிரிழந்தவர்கள் ஹெலிக்கொப்டர்கள் மூலம் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள ஆஸாத் காஷ்மீரின் தலைநகருக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

தமது பேரணி இந்திய எல்லையை நெருங்கிக்கொண்டிருக்கிறது என்றும்—

பேரணியில் சுமார் 20 ஆயிரம் பேர் இடம்பெற்றுள்ளனர் என்றும் முஸ்லிம் தீவிரவாதிகள் தரப்பில் கூறப்படுகிறது.

இதன் மத்தியில் கடந்த

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 13 பேர் கொல்லப்பட்டனர் என்கிறது விடுதலைமுன்னணி

இஸ்லாமபாத், பெப். 13

பாகிஸ்தான் படையினருடன் இடம்பெற்ற மோதலில் குறைந்தது 13 முஸ்லிம் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி நேற்று அறிவித்தது.

இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஜம்மு - காஷ்மீர் எல்லையில் இருந்து ஆறு மைல் தூரத்தில் உள்ள பாகிஸ்தானின் ஆஸாத் காஷ்மீர் பிரதேசத்தில் அம்மோதல் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[இ-எ[

## விடுதலை முன்னணி தலைவர் அமானுல்லாக்கான் கைது

ஸ்ரீநகர், பெப். 13

இந்தியாவுக்குள் ஊடுருவும் நோக்குடன் இந்திய எல்லையை நோக்கி பேரணியை நடத்திவரும் ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர் அமானுல்லாக்கான் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினரால் அவர் கைது செய்யப்பட்டார் என்று விடுதலை முன்னணி அறிவித்தது.

[இ-எ]

# அமைதி நிலை உருவாக்க தொடர்ந்து முயற்சிப்போம்

## "குவாக்கர்ஸ்" பிரதிநிதி சொல்கிறார்

யாழ்ப்பாணம், பெப். 13

வடக்கு—கிழக்கில் அமைதி நிலையை உருவாக்குவதற்கான முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடுவோம். இது சம்பந்தமாகப் பல தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறோம். இங்கு வந்து விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்கள் ஆக்கபூர்வமானவையாகவும், நம்பிக்கை அளிப்பனவாகவும் அமைந்தன.

இவ்வாறு கடந்த நான்கு நாட்கள் இங்கு தங்கியிருந்து நேற்றுக் கொழும்புக்குப் பயணமான "குவாக்கர்ஸ்" தூதுக் குழுவின் பிரதிநிதிகளில் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

கொழும்பு திரும்பியதும் குழுவில் அங்கம் வகிக்கும் ஜெனிவா தலைமைப் பிரதிநிதி, அரசாங்கத் தரப்பினருடனும், எதிரணி அரசியல்வாதிகளுடனும், அவசியம் ஏற்பட்டால் பௌத்த மத குருமாருடனும் பேச்சுக்கள் நடத்த உத்தேசித்திருப்பதாகவும்—அவர் மேலும் தகவல் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் கண்டு வேதனையடைகிறோம். அவர்களுக்கு அவசரம் தேவை அமைதி என்பதை உணர்ந்து கொண்[illegible]

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஜே. வி. பி. சந்தேக நபர் சூடுபட்டு மரணம்

கொழும்பு, பெப். 13

காவலில் இருந்து தப்பி ஓடிய ஜே. வி. பி. சந்தேக நபர் ஒருவர் பொலீஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டார். நேற்றுக் காலை சிகிரியாப் பொலீஸ் பகுதியில் இச் சம்பவம் நடந்தது.

[இ-10]

அமைச்சர்களுடன்

## முப்படைத் தளபதிகளும் நேற்று தீவுப்பகுதி விஜயம்

கொழும்பு, பெப். 13

அமைச்சர்கள் பெஸ்டஸ் பெரேரா, ஜோசப் மைக்கல் பெரேரா மற்றும் பி. தயாரத்தினா ஆகியோருடன் முப்படைத் தளபதிகள், வடக்கு - கிழக்கு ஆளுநர் நளின் செனவிரத்தினா வடக்கு - கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர் திரு. கணேசநாதன் ஆகியோரும் நேற்று தீவுப் பகுதிக்கு விஜயம் செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் அதி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்புப் பகுதியில் 4 தமிழர் சுட்டுக்கொலை!

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் பன்சேனை என்ற கிராமத்தைச் சுற்றி வளைத்த படையினர் அங்கு நான்கு தமிழர்களை சுட்டுக் கொன்றனர்.

பாலிப்பொடி இரத்தினம் [தாளங்குடா] ஞானசுந்தரம், கோபாலபிள்ளை வேலப்பொடி, வெள்ளையர் கொக்கையன் ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

சுற்றிவளைப்பின்போது பொதுமக்களின் 25க்கும் மேற்பட்ட வீடுகள் படையினரால் தீவைத்துக் கொளுத்தப்பட்டன என்றும்—

கைது செய்த இளைஞர்களை படையினர் முகாமுக்கு கொண்டு சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[இ-5]

## வாரத்தில் இரு நாட்கள் ஈழ அகதிகள் மன்னாருக்கு

### இராமானுஜம் கப்பலில் வருவர்

சென்னை, பெப். 13

ஒவ்வொரு வாரமும் செவ்வாய், சனி ஆகிய தினங்களில் இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் இராமானுஜம் கப்பல் மூலம் தலை மன்னாருக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று அறிவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் முதலாவது தொகுதி அகதிகள் இம் மாதம் 18 ஆம் திகதி இராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னாருக்கு கப்பலில் அனுப்பி வைக்கப்படவுள்ள

[6 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



எல்லை தாண்டப்போய் தொல்லையில் முடியுது போல......

## 369 அகதிகள் திருமலை புறப்பாடு

சென்னை, பெப். 13

சேலம் மாவட்டத்தில் தங்கியிருந்த ஈழத் தமிழ் அகதிகளில் 369பேர் நேற்று இலங்கை நோக்கிப் புறப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் திருகோணமலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களில் பெரும்பாலோர் அரசு ஊழியர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

பிரபா — பொட்டம்மான் விடயம்:

## இந்தியாவுடன் ஒத்துழைக்க அரச பிரமுகர் தயக்கம்

கொழும்பு, பெப். 13

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனையும், அவரது உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மானையும் தம்மிடம் ஒப்படைக்குமாறோ அல்லது தாம் கைது செய்ய அனுமதி தருமாறோ இந்தியா கேட்குமானால்—

அந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்யக்கூடாது என்று அரசின் மிக உயர் மட்டத் தலைவர் ஒருவர் கருத்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போஷாக்கு நிறைந்தது

## ஜீவாகாரம்

இது முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட ஓர் உபஉணவாகும். இதில் 100 கி. மாவில் 16·5 கி. புரதமும், 400 கி. கலோரி சக்தியும் அடங்கி உள்ளது. தேவையான விட்டமின்களும் மினறல்களும் அடங்கியுள்ளன.

இன்றைய விலை கிலோ ரூபா 49/

கிடைக்குமிடம்:-

அண்ணா கோப்பிக் கடை, யாழ்ப்பாணம்.

[சி/1509]



## TACEP FINAL EXAMS - 1992

(For The Information of All Students)

| | |
|---|---|
| Fifth Monthly Test: | 15 - 02 - 92 (at the respective Centres) |
| Final Achievement Test: | 22 - 02 - 92 (9 a.m.) |
| Language Skills Contest: | 22 - 02 - 92 (2 p.m.) |
| Award Ceremony: | 23 - 02 - 92 (2 p.m) |
| Release of Results and 'the Focus' | 17 - 03 - 92 (3-30p.m.) |
| Venue: | Jaffna Hindu College |

N. THEVAPALASINGHAM,
[Regional Co-ordinator]

(19692)



## கேள்வி அறிவித்தல்

### இறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு விடுதல்

புங்கன்குளம் ரயில் நிலையத்திற்கு அண்மையாக இயங்கி வந்த ஆட்டிறைச்சிக் கடையும், மாட்டிறைச்சிக் கடையும் குத்தகைக்கு விடப்படுவது சம்பந்தமாக ஆராயப்பட வேண்டியிருப்பதால், மேற்படி கடைகளை குத்தகைக்குப் பெற விரும்புபவர்கள் 17 - 02 - 1992 [திங்கள்] பிற்பகல் 2-00 மணிக்கு சின்னக் கடைச் சந்தைப்பகுதியில் உள்ள யாழ். மாவட்ட இறைச்சிக் கடை உரிமையாளர் சங்க கட்டடத்தில் கூடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புங்கன்குளம்,
சுகாதாரக்குழு.

]19698]



இலைகளின் மறைவிலிருந்து
தலைகளை நிமிர்த்தி
வெளியில் வருகிறார்கள்
காய்கள்...

ROTARACT CLUB

யாழ். றோட்டரக்ற் கழகம்
நடத்தும்

"வளரும் கலைஞர்களின் புகைப்படக் கண்காட்சி"

இடம்: யாழ். பரியோவான் கல்லூரி

காலம்: 1992 பெப்ரவரி

13, 14 - மாலை 2-00 — 5-00 வரை
15 - காலை 9-0 — 5-00 வரை

றோட்டரக்ற் கழகம்,
யாழ்ப்பாணம்.

[சி-1602]



## கண்ணீர் அஞ்சலி

### அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம்

அவர்களுக்கு
(உரிமையாளர், ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை)

அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியுறுவதாக.

வஸ்தியாம்பிள்ளை புத்தகசாலை,
வஸ்தியன் அச்சகம்.

390, பிரதான வீதி,
சுண்டிக்குளி.

(19695)


## பணம் யாருடையது?

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ். நகரில் கண்டெடுக்கப்பட்ட குறிப்பிட்ட தொகைப் பணம் அன்பர் ஒருவரால் உதயன் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பணத்தை இழந்தவர்கள் சரியான தகவல்களைத் தெரிவித்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

[அ]

## கொக்குவிலில் வாழை நார் பயிற்சி

யாழ்ப்பாணம், பெப். 13

கொக்குவில் மேற்கில் வாழை நார் பயிற்சித் திட்டம் ஒன்றை யாழ். றோட்டறிக் கழகம் ஆரம்பித்து வைத்துள்ளது.

றோட்டறிக் கழகத்தின் ஒருங்கிணைந்த தொழிற்பயிற்சித் திட்டத்தின் கீழ், கொக்குவில் மேற்கு றோட்டறிக் கிராமியக் குழுவினூடாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த பயிற்சித் திட்டத்தில் 30 இளம் யுவதிகள் பங்குபற்றுகின்றனர்.

யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம், பிரதேச செயலாளர் திரு. ஆ. மகாலிங்கம் ஆகியோர் இத்திட்ட ஆரம்ப விழாவில் கலந்துகொண்டு கருத்துரைகள் வழங்கினர்.

[ஓ]

## 10 லட்சம் பேர் பாதிப்பு

லண்டன், பெப். 13

தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் 10 லட்சம் பேர் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லாவித புதிய தொற்று நோய்களும் 90 சத வீதம் வளரும் நாடுகளையே பாதிப்பதாக அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

(த-10)

## உதை பந்தாட்ட, வலை பந்தாட்ட சுற்றுபோட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினர், உதைபந்தாட்டம் மற்றும் வலை பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு தினம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆகும். விண்ணப்பப் படிவங்களை ரூபா 50 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

[த]

## சிகை அலங்கரிப்பாளர் சமாசம் முன்மாதிரி

குருநகர், பெப். 13

யாழ். போதனா வைத்தியசாலை வளவில் திரியும் கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் நடவடிக்கைகளை வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம் சமீபத்தில் மேற்கொண்டது.

சமாசம் தனது சொந்தச் செலவில் ஆட்களை அமர்த்தி 21 நாய்களைப் பிடித்ததாக சமாசத் தலைவர் திரு. அ. ஞானப்பிரகாச டாஸ் தெரிவித்தார்.

அதேசமயம் நோயாளர்களின் நலன் கருதி யாழ். போதனா வைத்தியசாலைக்கு தண்ணீர் கைப்பம்பு ஒன்றையும், சமாசம் அன்பளிப்பாக வழங்கி உள்ளது.

(ந-51)

## தேர்தலில் எமக்கு வாக்களித்த யாழ்ப்பாண மக்களை மறந்துவிட முடியாது!

### சுதந்திரக் கட்சி எம். பி. கூறுகிறார்

கொழும்பு, பெப். 13

''1982, 1989 ஜனாதிபதித் தேர்தல்களில் எமக்கு பலமான ஆதரவைத் தந்த யாழ்ப்பாண மக்களை நாம் கைவிட்டுவிட முடியாது''.

—சுதந்திரக் கட்சி எம். பியான லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி எம். பிக்கள் சிலர் ஆரம்பித்த தேசிய பாரம்பாரிய (ஹெல உறுமய) அணியில் நாம் சேராதது குறித்து கருத்து வெளியிடுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''தேசிய பாரம்பரியம் அணி'' வகுப்புவாத அரசியல் நடத்துகின்றது. அந்த அணியின் கருத்துகள் கட்சியினுடையதல்ல; தனிப்பட்டவர்கள் சிலரினுடையவையாகும். இந்த அணிக்கு திருமதி சிறிமா பண்டாரநாயக்காவோ அல்லது அனுரா பண்டாரநாயக்காவோ அனுமதி வழங்கவில்லை.

உள்ளத்தில் தேசிய உணர்வு தேவைப்படுகிறது. அப்போது தான் எதிர்காலத்தில் பலனளிக்கக் கூடிய முறையில் நாட்டை நாம் ஆள முடியும்- இவ்வாறு திரு. கிரியெல்ல சொன்னார்.

[உ-எ]

## வவுனிக்குளம் பகுதியில் சிறுபோகம் பாதிப்பு

கடந்த வருடம் மழை குறைவாகப் பெய்ததால் வவுனிக்குளம், வன்னேரி, அக்கராயன் ஆகிய பகுதிகளில் சிறுபோக விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

இம்முறை சிறுபோக விதைப்புக் காலம் பிந்தியே இடம்பெற்றதாகவும் அனேக வயல்களுக்குள் யானைகள் புகுந்து பயிர்களை அழித்துவிட்டதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

[இ-111)

## மக்களின் வசதி கருதியே பிரதேச செயலகங்கள்

### திறப்பு விழாவில் உரை

குருநகர். பெப். 13

மக்கள் கச்சேரிகளுக்கு அலைந்து திரியாது சுலபமாக தமது அலுவல்களை நிறைவேற்றுவதற்கு வசதியாகவே பிரதேச செயலகங்கள் திறக்கப்படுகின்றன.

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேசச் செயலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய வடக்கு-கிழக்கு மாகாண சபை பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பிரதேசச் செயலகம் கடந்த திங்களன்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

திரு. து. வைத்திலிங்கம் தொடர்ந்து பேசுகையில்:

கச்சேரி முறை மாற்றத்தால் சேவையைப் பெற மக்கள் நாடிய காலம் மாறி மக்களைத் தேடி சேவை திரும்பும் நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்றார்.

யாழ். மேலதிக அரச அதிபர் திரு. க. சண்முகநாதன், திட்டமிடல் அதிகாரி திரு. சுவாமிநாதன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், திரு. சூ. சிறில், யாழ். உதவி அரச அதிபர் திரு. ஹெக்டர் யோசெப் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

[இ-51]

## சூழல் மாநாட்டை ஒட்டி புகைப்படப் போட்டி

### ஐ. நா. சங்கம் நடத்துகிறது

யாழ்ப்பாணம், பெப். 13

ஐ. நா. சூழல் திட்ட அமைப்பினால் உலகளாவிய ரீதியில் புகைப்படப் போட்டி ஒன்று நடத்தப்படுவதாக ஐ. நா. சங்கத்தின் யாழ். கிளை அறிவித்துள்ளது.

''உங்கள் உலகத்தின் மீது ஒரு பார்வை'' (Focus on your World) என்ற தலைப்பில் இந்தப் போட்டி நடத்தப்படுகிறது —

போட்டிக்கான புகைப் படங்களை ஐ. நா. சங்கத்தின் யாழ். பிரிவுக்கு அனுப்பி வைக்கலாம்.

இதே சமயம் —

ஐ. நா. சபையின் சுற்றுப் புறச் சூழல் வளர்ச்சி மாநாடு தென் அமெரிக்க நகரமான றியோ டீ ஜெனிரோவில் — எதிர்வரும் ஜூன் 1 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஐ. நா. வின் சுற்றுப் புறச் சூழல் திட்டம், சுவீடன் தலைநகர் ஸ்ரொக்ஹோமில் 1972 ஜூன் 5 ஆம் திகதி வித்திடப்பட்டது. இந்தத் தினமே உலகச் சுற்றுச் சூழல் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அதையொட்டியே இந்த மாநாடு ஏற்பாடாகியுள்ளது.

(ஓ-10)


## முக்கிய அறிவித்தல்

புள்ளிவிவர ஆய்வாளர்களுக்கான போட்டிப் பரீட்சை 1992 - 02 - 29ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது. இதற்கான அனுமதி அட்டைகள் நேற்று (12 - 02 - 1992) விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டன. தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை கிடைக்காவிடில் 1992 - 02 - 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கும் 12-00 மணிக்கும் இடையில் யாழ். செயலகத்தில் மாவட்ட புள்ளிவிவரவியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

கா. மாணிக்கவாசகர்,
அரச அதிபரும், மாவட்ட ஆணையாளரும்,
யாழ். மாவட்டம்.

செயலகம்,
யாழ்ப்பாணம்.
12 - 02 - 1992

(சி-1512)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ "சுப்பர் சொனிக்" ரக

# நவீன சீன போர் விமானங்கள் ஸ்ரீலங்கா விமானப் படைக்கு

## விரைவில் வந்து சேரும் எனத் தகவல்

கொழும்பு, பெப் 13

சீனாவிடம் இருந்து நவீன "சுப்பர் சொனிக்" ரக போர் விமானங்களை ஸ்ரீலங்கா விமானப்படை மிக விரைவில் பெற இருக்கிறது.

கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று நேற்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இவற்றில் எவ். ரி — 15. எவ். ரி—7, எம்.—7, சோவியத் பாணியிலான மிக் 21 போன்ற மிகப் பிந்திய ரகத்தைச் சேர்ந்த விமானங்களும் அடங்கும் என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா அரசு நவீன போர் விமானங்களை கொள்முதல் செய்து வருவதில் இருந்து, அது தொடர்ந்து போரில் நாட்டம் கொண்டிருக்கிறது என்பதையே காட்டுகிறது என்று அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

புதிதாக கொள்வனவு செய்யப்படும் போர் விமானங்கள், அனேகமாக வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு பாவிக்கப்படக் கூடும் என்றும் கருதப்படுகிறது. [ஒ-த]

## கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவு சமாசத்தின் பொதுக் கூட்டம், நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் கூட்டப்படவுள்ளது.

தற்பொழுது செயலற்று இருக்கும் யாழ். மாவட்ட வி. உ. வி. கூ. சமாசத்தை புனரமைத்து இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் கூட்டுறவுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ)

## 'ஹெல உறுமய' விவகாரம்; சமாளிக்க ஐவர் குழு

கொழும்பு, பெப். 13

சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் ஒன்று சேர்ந்து அமைத்திருக்கும் 'ஹெல உறுமய'' அணியைக் கலைப்பது குறித்து, அதன் அமைப்பாளர்களுடன் பேச்சு நடத்த ஐந்துபேர் கொண்ட குழு ஒன்றை சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழு நியமித்துள்ளது.

இக்குழுவின் உறுப்பினர்களாக அனுரா பண்டாரநாயக்கா, கே. பி. இரத்னாயக்கா, லஷ்மன் ஜெயக்கொடி, தர்மசிரி சேனநாயக்கா, கிங்ஸ்லி விக்ரமரத்தினா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

''ஹெல உறுமய'' (தேசிய பாரம்பரியம்) இந்த அணிக்கு சுதந்திரக்கட்சி தடை விதித்திருப்பது தெரிந்ததே. [உ-எ]

## சிறுவர் பாதுகாப்பு நிதிய பிரதிநிதி யாழ். வருகை

யாழ்ப்பாணம், பெப். 13

போர்ச் சூழ்நிலைக்கு மத்தியில் மக்களின் சமூகப் பிரச்சினைகளுக்கு எவ்வகையில் தீர்வு காணலாம் என்பது பற்றி ஆய்வு மேற்கொள்ள ஐக்கிய ராஜ்ஜிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் சமூகவியல் ஆலோசகர் திருமதி பாபரா யாழ்ப்பாணம் வந்திருக்கிறார்.

நிதியத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதி றெபேக்காவுடன் கடந்த செவ்வாயன்று யாழ். வந்து சேர்ந்த அவர், யாழ். அரச அதிபருடனும், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடினார்.

போர்க்கால சூழலில் அநாதைக் குழந்தைகள் மற்றும் விதவைகள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறித்தும்—

தமது நிறுவனம் மூலம் எவ்வாறு அவர்களுக்கு உதவ முடியும் என்பது குறித்தும் அவர் இங்கு விரிவாக ஆய்வு செய்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### வடக்கே பொருள்களை எடுத்துவர

## அனுமதி வழங்கும் அதிகாரிகள் இடமாற்றம்

### "பாஸ்" வழங்குவதிலும் கெடுபிடி!

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்குவது தொடர்பான விவகாரங்களை கையாளும் — கூட்டுப்படைத் தலைமையக உயர்மட்ட அதிகாரிகள் — மாற்றப்பட்டு அந்த இடங்களுக்கு புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த முதலாம் திகதி முதல் இந்த விவகாரங்களை புதிய அதிகாரிகள் கையாளுவதாகத் தெரியவருகிறது.

புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டதை அடுத்து வடக்கே பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதிப்பதில் கெடுபிடிகள் இடம் பெறுவதாகவும் —

முன்பு அனுமதியளிக்கப்பட்ட பல பொருள்களுக்கு இப்போது தடைவிதிக்கப்படுவதாகவும் அனுமதி பெறச் சென்றவர்கள் தெரிவித்தனர். (உ-3)

## மாணவரின் சீருடைத்துணி எடுத்துவர அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்குவதற்கு என வெளிநாட்டு நிறுவனம் ஒன்று அன்பளிப்பாக வழங்கிய சீருடைத் துணிகளை இங்கு எடுத்து வர கூட்டுப் படைத் தலைமையகம் தடை விதித்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றுக்கு, பல லட்சம் ரூபா பெறுமதியான — மாணவர்களுக்குரிய — சீருடைத் துணிகள், பாடசாலை உபகரணங்கள் போன்றவற்றை வெளிநாட்டு நிறுவனம் ஒன்று அன்பளிப்பாக வழங்கியிருந்தது.

மாணவர்களுக்குரிய காற்சட்டைத் துணி தவிர்ந்த ஏனைய பொருள்களை வடக்கே எடுத்து வர கூட்டுப் படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது. (உ-3)


## குருக்கள் தேவை

பிரான்பற்று பெரிய வளவு முருகன் ஆலயத்தில் நித்திய பூசை மற்றும் கருமங்கள் நடத்துவதற்குத் தகுதி வாய்ந்த குருக்கள் தேவை.

மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்.

இடம்: கோயில் முன்பாக உள்ள கடை

- ஆலய பரிபாலன சபை.

பெரிய வளவு முருகன் ஆலயம்,
பிரான்பற்று.

[19369]


# வவுனியா பஸ் டிப்போ மக்கள் மயமாகும்

### 28 ஆம் திகதி வைபவம்

வவுனியா, பெப். 13

வவுனியா பஸ் டிப்போவை மக்கள் மயமாக்குவது தொடர்பான வைபவம் இம்மாதம் 28 ஆம் திகதி நடைபெறும்.

போக்குவரத்து அமைச்சர் விஜயபால மெண்டிஸ், போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் யூ. எல். எம். பாரூக் ஆகியோர் இந்த வைபவத்தில் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-த)

## கொள்ளைகளில் ஈடுபட்ட 4 விமானப்படையினர் கைது

கொழும்பு, பெப். 13

ஜே. வி. பியினர் என்ற போர்வையில் கொள்ளையிடவும், கப்பம் பெறவும் முயற்சித்ததாகக் கூறப்படும் விமானப்படைச் சிப்பாய்கள் நால்வர் நேற்று முன்தினம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு, களனி, கந்தானை, ஜாஎல, பேலியகொடை ஆகிய இடங்களில் தமது கைவரிசையைக் காட்டிய இவர்கள் நேற்று முன்தினம் பகல் கந்தானைப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-த)

## தீவுப்பகுதி மக்களுக்கு கெற்பலியில் வீடு வசதி

யாழ்ப்பாணம், பெப். 13

தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் இரண்டாயிரம் குடும்பங்களை தற்காலிகமாகக் குடியேற்ற தென்மராட்சியில் — கெற்பலிப் பகுதியில் வீடமைப்புத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

யாழ். செயலகம் வழங்கியுள்ள நிதியில் இருந்து இந்த வீடுகளை அமைக்கும் வேலைகளை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்கொண்டுள்ளது.

இந்த வீடமைப்புத் திட்டத்தில் பாடசாலை, பாலர் பாடசாலை, கூட்டுறவுச் சங்கக் கிளை போன்றவையும் அமைக்கப்படவிருக்கின்றன.

375 வீடுகள் ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டு அவற்றில் அகதிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். ஏனைய வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. [ஒ-3]

## ஈழத் தமிழர் பிரச்சினை; தமிழகத்தில் அக்கறை இல்லை

### கொழும்பில் தொண்டா தகவல்

கொழும்பு, பெப். 13

ஈழத் தமிழர் பிரச்சினையில் முன்பிருந்த அக்கறை இப்போது தமிழகத்தில் இல்லை.

அமைச்சர் தொண்டமான் இவ்வாறு தெரிவித்தார்.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு தமிழகம் சென்றிருந்த அமைச்சர் தொண்டமான் மூன்று வாரங்களின் பின்னர் நேற்று முன்தினம் நாடு திரும்பினார். அதன் பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழகத்தில் புலிகளுக்கு ஆதரவாக இருந்த அலை குறைந்துவிட்டதை தமிழகத்தில் தாம் தங்கியிருந்தபோது அவதானிக்க முடிந்ததாகவும் அவர் சொன்னார். [உ-த]

# முல்லைப் பகுதி நோயாளர் போதியமருந்துஇன்றி அவதி

### வவுனியாவை நாடவேண்டிய அவல நிலை

புதுக்குடியிருப்பு, பெப். 13

புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் நோயாளிகள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மலேரியா, தொய்வு நோய்களுக்கான குளிசைகள் மற்றும் குழந்தைகளுக்கான நோய்த்தடுப்பு மருந்து வகைகள், விசர்நாய்க்கடி மருந்து ஆகியவற்றுக்கே தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அவல நிலை காரணமாக நோயாளிகள் வவுனியா ஆஸ்பத்திரிக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு நகரத்தில் படையினர் முகாம் அமைத்ததையடுத்து ஒட்டுசுட்டான், முள்ளியவளை, முள்ளிவாய்க்கால், பொக்கனை, விஸ்வமடு, உடையார்கட்டு மக்கள் புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியையே நாடி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. [இ 126]

## கார்க் குண்டு

பேரு நாட்டின் தலைநகரான லீமாவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு அருகில் நேற்றுக் கார்க் குண்டு ஒன்று வெடித்ததில் 2 பொலீஸ்காரர்கள் மரணமானார்கள். பலர் காயமடைந்தனர் தூதரகத்துக்கட்டடச் சுவர் ஒன்றும் இடிந்து விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-த)


தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

வருடாந்த

இல்ல மெய்வல்லுநர் போட்டி - 1992

15 - 02 - 1992

சனிக்கிழமை பி. ப. 1-00 மணிக்கு

கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

முதன்மை விருந்தினர்:

திரு. சி. உருத்திரலிங்கம் அவர்கள்
[பொறியியல் ஆலோசகர்,
சமக்கோன் நிறுவனம், ரூலின்ஸ் ஸ்தாபனம்]

சிறப்பு விருந்தினர்:

திரு. மு. சிவராசரத்தினம் M. A. அவர்கள்
[உதவிக் கல்விப் பணிப்பாளர், பண்டத்தரிப்புக் கோட்டம்]

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

[சி-1507]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

றோல், பற்றீஸ், புரியாணி போடத் தெரிந்தவர்களும், சிறு பையன்களும் தேவை. உடன் நேரில் வரவும். ஹோட்டல் றொலெக்ஸ், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [19664]

பிரபலமான வியாபார ஸ்தாபனம் ஒன்றிற்கு காசாளராகவும், விற்பனையாளர்களாகவும் கடமையாற்றுவதற்கு படித்த பெண்பிள்ளைகள் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 15ஆம் திகதிக்கு முன்னர் நேரில் வரவும். 61, மணிக்கூட்டு, வீதி, [வெலிங்டன் சந்திக்கருகாமையில்] யாழ்ப்பாணம். [19679]

## இலவச திருமண சேவை

26 வயது, அனுஷம், 8 இல் செவ்வாய் ஆசிரியைக்கு சைவபோசன மணமகன் தேவை. விண்ணப்பதாரருக்கு முடிந்தவரை பொருத்தமான குறிப்பு வழங்கப்படும். நேரடித் தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [19688]

## தவறிவிட்டது

620653810 V இலக்க சி. சாந்தகுமாரன் ஆகிய எனது அடையாள அட்டையுடன் கைப்பையும் யாழ். ஆஸ்பத்திரி வீதிக்கும், பூநாறி லேனுக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அடையாள அட்டையை சி. சிவகுமார், 14/1, பூநாறிலேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். [5043]

## இடமாற்றம்

ABCDE விவாகப் பொருத்துனர் அலுவலகம் இடமாற்றப்பட்டுள்ளது. இது 16-2-92 முதல் பின்வரும் விலாசத்தில் இயங்கும் 20, கண்டி றோட், சுண்டிக்குளி. [19678]

## காணவில்லை

T என அடையாளமிட்ட நிறைமாத வெள்ளை நிற பசுமாட்டை பொற்பதி வீதி, கொக்குவில் 9-2-92லிருந்து காணவில்லை. இதனைக் கண்டவர்கள் திருநெல்வேலி அம்பாள் ஸ்ரோர்ஸில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [19685]

Personal

**New Science Centre,**

JAFFNA.

*PHYSICS*

Mr. இரவீந்திரநாதன்
B.Sc. (Cey.)

**93 - A/L**
4-30—5-30 p.m.

**92 - A/L**
5-30—6-30 p.m.

ஆரம்பம்:
**15—02—1992** (சனி)
(சி-1500)

உள்ளூரில் உற்பத்தி விடுதலைக்கு உயிர்நாடி

---

இறையடி எய்திவிட்ட

## அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம்

[உரிமையாளர், ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை, அச்சகம்]

அவர்களுக்கு எமது இதயம் நெகிழ்ந்த

**கண்ணீர் அஞ்சலிகளை**

செலுத்துகின்றோம்.

கலாஜோதி புத்தக நிலையம்,
பிரதான வீதி,
சங்கானை.

[19686]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு. 16 — 04 — 1939

உதிர்வு 24 — 02 — 1991

### அமரர் கணபதி தம்பிராஜா

]பிராந்தியப் பொறியியலாளர்]

திதி: 13 - 02 - 1992

மயிலிட்டி ஊர் தனில் புகழ் படைத்தீர்
இளவாலை ஊர் தனில் ஒளி கொடுத்தீர்
யாழ்நகரில் பெயர் பெற்று உயர்வு அடைந்தீர்
நிலவில்லா வானம் ஏது - உங்கள்
துணையில்லா வாழ்வுதான் எமக்கேது
விழி இருந்தும் உறக்கம் இல்லை - இப்போ
துணை இல்லாமல் பேதையர் நாம் வருந்தி
வாடுகின்றோம்.

மாசியை விட்டகன்று ஆண்டொன்று நகர்ந்தாலும் உங்கள் நினைவுகள் எங்கள் உள்ளத்தில் என்றும் அணையாத தீபமாக பிரகாசித்துக் கொண்டே இருக்கும்.


மனைவி, பிள்ளைகள்,
மற்றும் [illegible]ற்றார், உறவினர்கள்.

''யசோதா வாசா''
போயிட்டி வீதி, இளவாலை. [19647]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

13 — 02 — 1992



தோற்றம்: 19 — 04 — 1941

மறைவு: 14 — 01 — 1992

நாவாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். அரியாலையை வசிப்பிடமாகக் கொண்டவருமான

### அமரர் வாரி இராசகிளி (கிளி)

திதி வெண்பா

ஆண்டு பிரசோற்பத்தி மார்கழி முப்பத்தொன்று
தூண்டும் அபரபக் கத்தசமி — மீண்டுலகில்
வாரா வழிசென்றான் வல்ல இராசகிளி எனும்
காந்தமிகு சிற்பரன் சீர்சேர் தினம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்.

660, கண்டி வீதி - அரியாலை,
யாழ்ப்பாணம். [19684]

---

## பூஸா இளைஞர்கள் மகஸினுக்கு


பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 16 தமிழ் இளைஞர்கள் கொழும்பு மகஸின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.

கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரனின் வேண்டுகோளை அடுத்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-த)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 15 — 05 — 1912

மறைவு: 14 — 01 — 1992

### அமரர் கந்தையா சிவகுரு

புங்குடுதீவு கிழக்கு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், தற்போது 24/3, மதவடி லேன், கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான கந்தையா சிவகுரு அவர்கள் 14 - 01 - 1992 அன்று இறைபதம் எய்தினார்.

இன்று (13 - 02 - 1992) அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் பின் நடைபெறும் சபிண்டீகரண போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

உமது பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

24/3, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம். [19690]

---

சாவகச்சேரி,

தெங்கு - பனம் பொருள் உற்பத்தி-
விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்,

## பதவி வெற்றிடம்

1. கிளை முகாமையாளர்: [ஆண்]

(அ) கல்வித் தகைமை:
க. பொ. த. சா/த. பரீட்சையில் தமிழ் மொழி, எண்கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது தூயகதணி உட்பட 6 பாடங்களில் சித்தி.

(ஆ) வயது எல்லை:
20 தொடக்கம் 35 வருடங்கள் வரை.

(இ) சம்பளத் திட்டம்:
700 — 15 x 10 — 20 x 5 — 950
அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.

2. விற்பனையாளர்: (ஆண்)

(அ) கல்வித் தகைமை:
எட்டாம் வகுப்பில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) வயது எல்லை:
20 தொடக்கம் 30 வருடங்கள் வரை

(இ) சம்பளத் திட்டம்:
685 — 10 x 10 — 15 x 5 — 860
அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.

குறிப்பு: சங்கப் பணியாளர்களுக்கும், சங்க எல்லைக்கு உட்பட்ட விண்ணப்பதாரர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். கல்விச் சான்றிதழ்களின் நிழல் பிரதி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் **25-02-1992** ஆம் திகதிக்கு முன்னர் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட்டு, நிரந்தர முகவரியிடப்பட்டு, நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்புதல் வேண்டும்.

— பொது முகாமையாளர்.

தெங்கு-பனம் பொருள் உற்பத்தி-
விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்,
டச்சு வீதி, சாவகச்சேரி.
11 - 02 - 1992 [சி-1508]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### விடிவுக்கான உணர்வு

கொழும்பில் நிரந்தரமாக அன்றி, தற்காலிகமாக வசிப்பவர்கள் தங்களைப் பற்றிய முழு விவரங்களையும் பொலீஸில் பதிவு செய்யவேண்டும்.

பாதுகாப்பு அமைச்சு இது சம்பந்தமான உத்தரவை மீண்டும் விடுத்து, இரண்டு வார கால அவகாசமும் கொடுத்திருக்கிறது. கடந்த வருடத்திலும் இதே மாதிரியான உத்தரவை அரசு நடைமுறைப் படுத்தி இருந்தது.

அப்போதும்சரி, இப்போதும் சரி வடக்கு-கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து சென்று கொழும்பிலும் அதனைச் சூழவுள்ள மேற்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளிலும் தங்கியிருக்கும் தமிழர்களைச் சித்திரவதை செய்வதே இந்த உத்தரவின் நோக்கங்களில் ஒன்று.

சென்ற வருடத்தில் இந்த உத்தரவு நடைமுறைக்கு வந்ததும், கொழும்புக்கு உத்தியோகபூர்வ அலுவல்களுக்காகச் சென்ற தமிழ் அரசாங்க அதிகாரிகள் கூட, எவ்வளவோ கஷ்டங்களையும் இன்னல்களையும், வேதனைகளையும் அனுபவிக்க நேர்ந்தது. ஏனையோர் ஓர் அவசர காரியமாகக் கூட கொழும்பில் தங்கி நிற்க முடியாதவாறு பொலீஸாரும், படையினரும் பெரும் அட்டகாசம் புரிந்தனர்.

''சந்தேகத்தின் பேரில் கைது''— என்ற வசதியைப் பயன்படுத்தி தமிழர்களைக் கண்டபடி கைதுசெய்து படையினரும், பொலீஸாரும், அவர்களின் தரகர் கூட்டங்களும் நிறையப் பணம் சம்பாதித்ததும் பகிரங்கமான ஒன்று.

இந்தப் பணம் சேர்க்கும் கூட்டத்திடம் அகப்பட்டு அடிவாங்கியும், உதை வாங்கியும், பணம் இழந்தும் போன அப்பாவித் தமிழர்கள் ஆயிரம் ஆயிரம் பேர். வெளிநாடு செல்வதற்கென கடன்பட்டுச் சென்ற பணத்தில் ஒரு பகுதியை அவர்களுக்குத் தாரை வார்த்தவர்கள் மிகப் பலர்.

மீண்டும் அப்படி ஒரு நிலைமை தோன்றப்போகிறது. தமிழ்ப் பகுதிகளில் தங்களுக்குப் பாதுகாப்பும், வசதியும் இல்லை என்று கருதியும், போர்க் காலச் சூழலில் கஷ்டங்களை அனுபவிக்க மனமின்றியும் கொழும்பில் அடைந்தவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?

என்ன கஷ்டம் வந்தாலும், வசதியீனங்கள் ஏற்பட்டாலும் சொந்த மண்ணில் வாழ்ந்து, சொந்த மக்களுடன் சேர்ந்து சாக வேண்டும் என்ற மனப்பிடிப்பும் உணர்வும் இல்லாமல் அங்கே ஓடிப் போனவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?

இங்கே குண்டு வீச்சு, ஷெல் வீச்சால் செத்துப் போகக் கூடும் என்று பயந்து ஓடியவர்கள் அங்கு கைது செய்யப்பட்டு படையினரின் அடி உதைக்கு இரையாக மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் போனவர்கள் போல, கொழும்புக்கு மட்டுமல்ல தமிழகத்துக்குச் சென்றவர்களும் நிர்ப்பந்தமாகத் திருப்பி அனுப்பப்படுவது ஈழத் தமிழர்களுக்கு ஒரு படிப்பினையாக அமைய வேண்டும். வெளிநாடுகளுக்கு அகதிகளாக ஓடிப் போனவர்கள் மட்டும் நிம்மதியாக வாழ்கிறார்களா?

என்னதான் கஷ்டங்களை எதிர்கொண்டாலும், பிறந்த மண்ணில், சொந்த மக்களுடன் வாழ்வது போன்ற மகிழ்ச்சியும், திருப்தியும் ஒருவனுக்குக் கிடைக்க முடியாது.

வாழ்ந்தாலும் என் மண்ணில் வாழ்வேன்; செத்தாலும் தாயக அன்னைக்கே என் சாம்பல் — என்ற உணர்வு எப்போது தமிழர்களுக்கு உள்ளத்தில் உறைகிறதோ அப்போது தான் அவர்களுக்கு விடிவு!

# பனஞ்சீனி தயாரிக்கும்போது வரும் கழிவுப் பாகை பயனுள்ளதாக்கலாம்

## சிமெந்துக்கு மாற்றுப்பொருள் தயாரிக்க உதவுகிறது அது!

பனை தரும் பல பயனுள்ள பொருள்களில் பதநீரும் ஒன்று. பதநீரில் இருந்து சீனி தயாரிக்கப்படுகிறது. இப்போது பனஞ்சீனி உற்பத்தி அதிகரித்து வருகிறது. சீனி உற்பத்தி செய்யும்போது பாகு கழிவுப்பொருளாகிறது. ஆனால் அந்தப் பாகும் பயனுள்ளதே.

சத்துள்ள கூழ்ப்பதநீரில் இருந்து வெண்மையான சீனி எடுத்த பிறகு, எல்லா ஊட்டச்சத்துக்களும் கழிவுப் பாகிலே சேர்ந்துவிடுகின்றன. இயந்திரத்தில் நெல்லை அரைத்துப் பளபளப்பாக்கும் போது அரிசியில் உள்ள உணவுச்சத்துக்கள் தவிட்டுடன் போய் விடுவது போல பதநீரிலுள்ள ஊட்டச்சத்துக்கள், சீனி தயாரிக்கும் பொழுது கழிவுப் பாகுடன் கலந்து கொள்கின்றன.

இக்கழிவுப் பாகினைப் பின்வரும் வழிகளில் பயன்படுத்தலாம்.

மண் கலவை தயாரிப்பின் போது களிமண், ஆற்றுமணல் இரண்டையும் தேவைக்கு ஏற்றபடி கலந்து தண்ணீர் சேர்ப்பதற்கு முன்னர், கலவையின் நிறையில் மூன்றில் தொடக்கம் ஐந்து சதவிகிதம் இக்கழிவுப் பாகைக் கலந்து சாந்தாகச் செய்து செங்கற் கட்டடங்கள் கட்டலாம். நனையாத இடங்களில் உள்ள சுவர்களுக்கு சிமெந்துக்குப் பதிலாக இதைப் பூசினால் அதிக பலமாகவும், உறுதியாகவும் இருக்கும். இந்தக் கலவையில் ஒரு சதவிகிதம் சாம்பலையும் சேர்த்துக் கொண்டால் சுவருக்கு இன்னும் அதிக வலுவைக் கொடுக்கும்.

மற்றும் கால்நடைத் தீனாக தவிடு, உலர்ந்த புல் இவைகளுடன் கழிவுப்பாகைக் கலந்து மாட்டுத் தீவனமாக உபயோகிக்கலாம். இதனால் ஓரளவுக்கு பால் அதிகரிக்கும். அத்துடன் பார வண்டி இழுக்கும் மாடுகளுக்கு கிராம மக்கள் பனைவெல்லத்தை தவிட்டுடன் கலந்து கொடுக்கின்றனர்.

கழிவுப் பாகினை மேற்கூறப்பட்ட வழிகளில் பயன்படுத்துவதன் மூலம் அதன் பயனை அதிகரிக்கலாம்.

கழிவுப்பாகை நொதிக்க வைக்கும்போது அற்கோலாக (மதுசாரமாக) மாறுவதனால் சாராய உற்பத்திக்கு பெருமளவு பயன்படுத்தப்படுகிறது. ★

—தமிழீழ ஆய்வு நிறுவனம்

உள்ளூர் உற்பத்தி

# 25 முதல் 35 முட்டைகளையும் ஒரு கோழிக்கு அடை வைக்கலாம்

நம் நாட்டில் தற்போது ஒரு கோழியில் 10 அல்லது 11 முட்டைகளைத் தான் அடை வைக்க முடியும். 15 முட்டைகள் வரை அடை வைக்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆனால் சில சமயங்களில் எதிர்பார்த்த பலன் கிடைப்பதில்லை. ஆனால் ஒரு கோழியில் 25 முதல் 35 முட்டைகளை அடை வைக்கும் முறையை தமிழீழ ஆய்வு நிறுவனம் தற்போது அறிமுகம் செய்துள்ளது.

அடை வைப்பதற்கு முதல் தேவை அடைக்கோழி. அடை காக்கும் தருணத்தில் இருக்கும் கோழிகளை அடையாளம் கண்டுகொள்வது எளிது.

அவை விநோதமான முறையில் சத்தத்தை எழுப்பிக் கொண்டு இருக்கும். அவ்வப் பொழுது இருண்ட மூலைகள் போன்ற இடங்களில் படுக்க முற்படும். நாட்டுக் கோழிகளே அடைகாப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

இயற்கை முறையில் அடை வைப்பதற்கு அடைப்பெட்டிகள் தேவை. ஒவ்வொரு பெட்டியும் 40 செ.மீ. நீளம், அகலம் கொண்டிருக்க வேண்டும்.

கோழி உள்ளே வந்து போவதற்கு எளிதாக அடைப் பெட்டியைத் தரையில் வைத்தல் நன்று.

அடைப்பெட்டிக்கு அளவாக தரையில் 40 செ.மீ. நீளம், அகலமாக வெட்டி அதை வடிவாக சாணத்தால் மெழுகவேண்டும். அதன் அடியில் சிறிது மண்ணை பரப்பி அதன் மீது சிறு வைக்கோலைப் போட வேண்டும். இந்த வைக்கோல் மையத்தில் ஆழமாகவும் ஓரங்களில் உயர்ந்தும் இருக்குமாறு கூடு போல அமைக்கப்பட வேண்டும்.

அடியில் பரப்பப்பட்ட மண் ஓரளவு உட்புறம் ஈரத்தையும் கொடுக்க உதவும். பெட்டியின் உட்புறம் இருட்டாக இருத்தல் அவசியம். சிறிது இருட்டிய பின் முட்டைகளை வைத்து கோழியை விட வேண்டும். முட்டைகள் 7 நாட்களுக்கு உட்பட்டவையாக இருத்தல் வேண்டும். நடுத்தரமான எடையுள்ள முட்டைகளே நன்கு பொரிக்க வல்லவை.

முட்டைகளை அடைவைக்கும் போது ஒழுங்காக அடுக்க வேண்டும். பின்னர் ஒன்று விட்ட ஒரு நாள் முட்டையை மெதுவாக எடுத்து மேலே உள்ளதை கீழும், கீழே உள்ளதை மேலும் வைக்க வேண்டும். 18 ஆம் — 19 ஆம் நாள் முட்டைகளை நீருள் போட்டுப் பார்க்க வேண்டும். குஞ்சு உள்ள முட்டை மிதக்கும். கூழ் முட்டை தாழும். கூழ் முட்டையை பிரித்து எடுத்துவிட வேண்டும். 21 நாட்களின் பின்னர் குஞ்சு பொரிக்கத் தொடங்கும்.

குஞ்சு வெளிவந்த பின்னர் கோதுகளை அகற்றிவிடல் வேண்டும். பின்னர் இரண்டாம் நாள் குஞ்சுகளை வெளியே விடல் வேண்டும். [★]

# ஆலயத்தின் ஆதரவில் பாலர் பாடசாலை

## தெல்லிப்பழையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 13

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானம் பாலர் பாடசாலை ஒன்றை நிறுவியுள்ளது.

துர்க்கை அம்மன் பாலர் பாடசாலை என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ள பிரஸ்தாப கல்வி நிலையம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாலர் பாடசாலையின் அங்குரார்ப்பண வைபவம் தேவஸ்தானத்தின் தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெற்றது.

தெல்லிப்பழை மகளிர் குழுத் தலைவி திருமதி சசிதேவி கந்தையா பாடசாலையைத் திறந்து வைத்தார். திருமதி இராமநாதன் மங்கள விளக்கேற்றிப் பாடங்களை ஆரம்பித்து வைத்தார்.

இப்பாடசாலையில் அன்றைய தினம் 27 பிள்ளைகள் சேர்க்கப்பட்டனர்.

அங்கு பயிலும் பிள்ளைகளின் உணவு, உடை, புத்தகங்கள் மற்றும் உபகரணங்களுக்குத் தேவையான முழுச் செலவையும் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் வழங்கும் என்று அதன் தலைவர் அறிவித்தார். [அ]

# பொலீஸ்காரரின் கையை குதறிய எய்ட்ஸ் நோயாளி!

பாரிஸ், பெப். 13

கைது செய்யச் சென்ற பொலீஸ்காரரைக் கடித்துக் குதறினார் ஒருவர், கடித்தவர் எய்ட்ஸ் நோயாளி.

''நான் ஒரு எய்ட்ஸ் நோயாளி. நீ வீணாகச் சாகப் போகிறாய்!'' என்று மிரட்டியவாறு சம்பந்தப்பட்டவர் பொலீஸ்காரரை கடித்துக் காயப்படுத்தினார். பொலீஸ்காரரின் கையில் இருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது.

அவர் உடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அவசர சிகிச்சைகள் நடந்தன. எனினும் பயங்கர கிருமியான எச்.ஐ.வி. வைரசுகள் அவரது உடலினுள் [illegible] வில்லை என்பது வைத்திய பரிசோதனையின் மூலம் தெரிய வந்தது.

இச்சம்பவம் பிரான்ஸில் நடந்தது. எய்ட்ஸ் நோயாளி என தன்னைக் கூறிக் கொண்டவர் பிலிப் போயில் என்பவராவார்.

இவர் ''மூல் ஹவுஸ்'' நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். ''தான் போதையில் இருந்ததாகவும், நடந்த சம்பவம் ஒன்றும் தனக்கு நினைவில்லை'' எனவும் அந்த நபர் விசாரணையின் போது கூறினார்.

நீதிவான் அவருக்கு 2 வருட சிறைத் தண்டனை விதித்து [illegible]. (இ-10)

# அரசியல் வாதிகளின் மூளையின் பெறுமதி என்ன?

## கிறிஸ்டியன் பேர்னாட் சொன்ன கதை

கொழும்பு, பெப். 13

றோட்டரி மாவட்ட மாநாட்டில் கலந்து கொள்ள அண்மையில் கொழும்பு வந்திருந்த பிரபல இருதய மாற்று சிகிச்சை நிபுணர் பேராசிரியர் கிறிஸ்டியன் பேர்னாட் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் பேசினார்.

இருதய மாற்றுச் சிகிச்சையில் வெற்றி கண்ட டாக்டர் பேர்னாட் தனக்கு பிடித்தமான இன்னொரு உறுப்பு மாற்றுச் சிகிச்சை பற்றியும் அக்கூட்டத்தில் பிரஸ்தாபித்தார்.

மூளை மாற்று சத்திர சிகிச்சையே அதுவாகும்.

மூளை மாற்று சத்திர சிகிச்சை பற்றிப் பிரஸ்தாபித்த போது பேராசிரியர் கிறிஸ்டியன் பேர்னாட் கதை ஒன்றை சுவாரஸ்யமாகக் கூறினார்.

மூளை மாற்று சத்திர சிகிச்சைக்கு ஒரு நோயாளி உட்படுத்தப்பட இருக்கிறார். சத்திர சிகிச்சைக்கு முன் அந்த நோயாளியிடம் பல மூளைகள் காண்பிக்கப்படுகின்றன. விருப்பமான மூளை ஒன்றைத் தெரிவு செய்யும்படி அந்த நோயாளி கேட்கப்படுகிறார்.

அவரிடம் காட்டப்பட்ட மூளை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விலை குறிக்கப்பட்டிருக்கிறது.

மிகக் கூடுதலான விலை குறிக்கப்பட்ட மூளையைக் காட்டி அந்த நோயாளி ''இந்த மூளைக்கு மட்டும் ஏன் இவ்வளவு விலை'' — என்று கேட்கிறார்.

'' இது புத்தம் புதிய பாவிக்கப்படாத மூளை. அது தான இவ்வளவு விலை. அரசியல் வாதிகள் எப்போதும் மூளையைப் பயன்படுத்துவது இல்லையே'' — என்று அவருக்குப் பதில் கொடுக்கப்படுகிறது.

பேராசிரியர் பேர்னாட் இக்கதையைத் தெரிவித்த கூட்டத்தில் நல்லவேளையாக, அரசியல் வாதிகள் எவரும் காணப்படவில்லை.

ஆனால் மிக முக்கிய பிரமுகர் ஒருவரின் மனைவி மட்டும் அங்கு காணப்பட்டார். அவர் நிபுணரின் நகைச்சுவையை புன்சிரிப்புடன் ரசித்ததைக் காணக் கூடியதாக இருந்தது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதுவினைஞர் பரீட்சைக்கு 2,400 பேர் தோற்றுவர்

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் 2 ஆயிரத்து 400 பேர் தோற்ற உள்ளனர்.

பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

இந்த பரீட்சைக்காக 16 நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை நிலையங்களில் கடமை ஆற்ற உள்ள மேற்பார்வையாளர்களுக்கான கூட்டம் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது. [இ3-]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லம்மா பசுபதிப்பிள்ளை

பொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டை வாசியான திருமதி செல்லம்மா பசுபதிப்பிள்ளை 12-2-1992 புதன்கிழமை அதிகாலை காலமானார்.

இவர் காலஞ்சென்ற பாடசாலை அதிபர் நா. பசுபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், தர்மராஜா, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அருமைத் தாயாரும், ராஜேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் மாமியாரும், Dr. திருமதி மலர்மகள் யோகநாதன் [லண்டன்], கலைமகள் [லண்டன்], திருமகன் [பொறியியலாளர், கொழும்பு], ரவிச்சந்திரன் [கனடா], ஸ்ரீரஞ்சினி, ஸ்ரீரஜனி, தவச்சந்திரன் ஆகியோரின் அன்புமிகு பாட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் புதன்கிழமை மாலை 5-00 மணிக்கு ஆனைக்கோட்டை குடும்ப மயானத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவர்க்கும் அறியத்தருகிறோம்.

தகவல்;
மகேஸ்வரி ஸ்ரீஸ்கந்தராஜா

பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

(19702)

## குமாரசாமி நடராசா

சித்தன்கேணியை வசிப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய விதானையார் குமாரசாமி நடராசா நேற்று [12-2-92] சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஓவசியர் குமாரசாமி - பொன்னம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும், தையல்நாயகியின் அன்புக் கணவரும், மங்களராஜேஸ்வரி, சந்திரராசா, சாரதா, தவராசகுமார் [போறூட் நிறுவனம்], மின்னாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாதம் [இளைப்பாறிய விவசாய உத்தியோகத்தர்], உருக்குமணி, அம்பிகாதேவி, நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சபாரட்ணம் [இளைப்பாறிய கைத்தொழில் பரிசோதகர்], சிவபாக்கியம், கனகம்மா, காலஞ்சென்ற Dr. துரைராசா, இராசேந்திரம் [ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்], தங்கமலர், வேலாயுதம்பிள்ளை [இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்] ஆகியோரின் அன்புச் சகோதரரும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற R. K. தம்பையா, செல்வரட்ணம், காலஞ்சென்ற பாலசிங்கம், மகேஸ்வரி, மா. சக்திவேல் மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அருணேஸ்வரன் [பொறியியலாளர், அவுஸ்திரேலியா], உஷாதேவி, பிரபாகரன் [மருத்துவபீடம், யாழ்ப்பாணம்], யசோதரா [மாணவி, யாழ். பல்கலைக்கழகம்], ஜிவாகரன், ஜயந்தன், திலீபன், கிசாந்தன், கனிசா, அரவிந்தன், வினித்தா, கமலினி, மகிளினி ஆகியோரின் அன்புப் பேரனும், கணதீபன், விதுரா, சுதர்சன் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும், கதிரவேற்பிள்ளை, ஆனந்தராசா, கனகாம்பாள் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [13-2-1992] பிற்பகல் 1 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாற்று மயானத்தில் தகனம் செய்யப்படும்.

பிரதான வீதி,
சித்தன்கேணிச் சந்தி.
[19703]

தகவல் :
ச. நகுலேஸ்வரன்
ந. தவராசா

## திருமதி மகேஸ்வரி சிவக்கொழுந்து

திருமதி மகேஸ்வரி சிவக்கொழுந்து 12-2-1992 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்பு மனைவியும், திருமதி ஜீவரட்னம் [கொக்குவில் இந்துக் கல்லூரி], Dr. புவனேஸ்வரி, திருமதி ஞானேஸ்வரி, திரு. சிவதாஸன் [ஓய்வுபெற்ற உப்பு கூட்டுத்தாபன உத்தியோகத்தர்], திரு. சிவபாலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நவரட்னம், Dr. தியாகலிங்கம், திரு. விவேகானந்தா, திருமதி புஷ்பா, திருமதி கோகிலா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-2-1992 [இன்று] வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவதாஸன்

மஞ்சவனப்பதி வடக்கு வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(19704)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13-2-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

# புதுக்குடியிருப்பு பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 13

முல்லைத்தீவு, மணலாறு ஆகிய பகுதிகளில் இருந்து கடந்த இரு நாட்களாகப் படையினர் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

புதுக்குடியிருப்பு, தண்ணீர் ஊற்று, நாயாறு, குமுழமுனை, அளம்பில் ஆகிய இடங்களில் ஷெல்கள் விழுந்து வெடிக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-5]

## முப்படைத்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காரிகளையும், பொதுமக்களையும் சந்தித்தனர் என்றும்—

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஊர்காவற்றுறை, காரைநகர், மண்டைதீவு, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய பகுதிகளில் இம் மாதம் 20 ஆம் திகதி முதல் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ-5]

## வாரத்தில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னர்.

தமிழ்நாடு அகதிகள் மறுவாழ்வுத்துறை ஒருங்கிணைப்பாளர் திரு. சி. எம். இராம்தாஸ் முதலாவது தொகுதி அகதிகளுடன் கப்பலில் தலைமன்னார் செல்வார் என்றும் அகதிகள் மன்னாரில் உள்ள அகதி முகாம்களில் தங்க வைக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மண்டபம் முகாமில் தற்போது தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளே முதலில் தலைமன்னாருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. [இ-எ]

## முஸ்லிம்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செவ்வாய்க்கிழமை இரவு, இருளோடு இருளாக சுமார் அறுநூறு முஸ்லிம் தீவிரவாதிகள் இந்திய எல்லையைக் கடக்க முயற்சித்தனர் என்றும்—

இந்திய இராணுவம் தொடர் துப்பாக்கிச் சூடு நடத்தி இவர்களை தடுத்தது என்றும் இந்திய தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையில், எல்லையை ஊடுருவ, பாகிஸ்தான் தரப்பில் இருந்து வரும் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு ஆதரவு தெரிவித்து இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஜம்மு காஷ்மீரில் நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

ஊரடங்குச் சட்டத்தை மீறிய ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இந்திய இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியது. அதில் ஐந்து பேர் காயமடைந்தனர். [இ-எ]

## அமைதி..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வரக் கூடிய சமாதானச் சூழ்நிலையை ஏற்படுத்த பல தரப்பினருடனும் பேச்சு நடத்த உத்தேசித்துள்ளோம் — எனவும் அந்தப் பிரதிநிதி கூறினார்.

''குவாக்கர்ஸ்'' தூதுக்குழுவினர் யாழ். பல்கலைக்கழகம், யாழ். போதனா ஆஸ்பத்திரி ஆகியவற்றுக்கு விஜயம் செய்து அங்குள்ள உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

யாழ். ஆஸ்பத்திரிக்கு அவசரம் தேவையான வைத்திய உபகரணங்களை மேலை நாடுகளிலிருந்து பெற்றுத்தர முயற்சி செய்வதாக அவர்கள் கூறினர்.

தூதுக்குழுவினர் நேற்று [illegible] நோக்கிப் பயணமாகினர். [அ-3]

# நான்காவது யுத்தம் ஒன்றை நடத்த பாக். விரும்பவில்லை

## பிரதமர் ஷெரிப் நேற்று அறிவிப்பு

ராவல்பிண்டி, பெப். 13

இந்தியாவுடன் நான்காவது யுத்தம் ஒன்றை நடத்துவதற்கு பாகிஸ்தான் விரும்பவில்லை.

பாகிஸ்தான் பிரதமர் ஷெரிப் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய நிலைமையைச் சமாளிக்க பாகிஸ்தான் தன்னாலானதைச் செய்யும் என்றும் எல்லை ஊடுருவலைத் தடுக்கத் தவறினால் உயிரிழப்புகள் அதிகமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். [இ-எ]

# லலித்தின் இரட்டை வேடம்: ஒஸி அம்பலப்படுத்துகிறார்

கொழும்பு, பெப். 13

தற்போது புதிய கட்சி அமைத்துள்ள முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி எப்போதுமே இரட்டை வேடம் போடுபவர் தான்.

ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர் ஒஸி அபயகுணசேகரா இப்படித் தெரிவித்துள்ளார்.

''29-7-1987இல்கொழும்பில் இலங்கை இந்திய உடன்படிக்கையில் ஜே. ஆர். ஜெயவர்தனாவும் ராஜீவ் காந்தியும் கைச்சாத்திட்டனர். அந்த நிகழ்ச்சியை அத்துலத்முதலி பகிஷ்கரித்தார்.

அன்று இரவு ராஜீவைக் கௌரவித்து திரு. ஜெயவர்த்தனா விருந்துபசாரம் ஒன்றை அளித்தார். அந்த விருந்தில் அத்துலத்முதலி கலந்துகொண்டார். அதுமட்டுமல்ல, காலையில் நடந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாதது குறித்து ஜெயவர்த்தனாவிடமும், ராஜீவ் காந்தியிடமும் அத்துலத்முதலி மன்னிப்புக் கோரினார்.

பொதுமக்களுக்கு ஒரு முகத்தைக் காட்டும் அத்துலத்முதலி, நாட்டுக்குத்துரோகம் செய்ய இன்னொரு வேடம் பூணுவார்.

இலங்கை- இந்திய உடன்படிக்கையை அத்துலத்முதலி உண்மையாக எதிர்ப்பவராக இருந்தால் அந்த உடன்படிக்கையின் மூலகர்த்தாக்களான காமினி திஸநாயக்கா மற்றும் றொனி டி மெல் ஆகியோருடன் அவர் தொடர்பு வைத்துக்கொள்ளக்கூடாது''— இப்படி திரு. அபயகுணசேகரா மேலும் தெரிவித்தார். [இ-எ]

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெற இருந்த சேவைக்கால ஆசிரியர்களுக்கான இரண்டாவது அமர்வு மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது. [ஓ]

## டிப்ளோமா பயிற்சி நெறி நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 13

முழுநேர டிப்ளோமா பயிற்சி நெறிக்கு மாணவர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு மட்டுமே நாளை நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

வெளி மாவட்டங்களில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் ஆறாம் திகதி நடைபெறும். [இ-3]

## இந்தியாவுடன்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துக் கொண்டிருக்கிறாராம்.

இத்தகவலை ''ராவய'' சிங்களப் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. ஆனால் அந்த உயர்மட்டத் தலைவர் யார் என்ற விவரம் தெரியப்படுத்தப்படவில்லை.

இந்தச் செய்தியை அலங்கரிக்க திரு. பிரபாகரனின் படமும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டால், ஸ்ரீலங்கா - இந்திய உறவு முன்னரைப் போல மீண்டும் விரிசல் அடையும் என்று அரசாங்கத் தரப்பில் உள்ள மற்றொரு சாரார் கருதுவதாகவும் ''ராவய''ச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ-10]

## பஸ் விபத்தில் மூவர் மரணம்

தென்பகுதியில் உள்ள கலேவெல என்ற இடத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற பஸ் விபத்தில் ஒரு பொலீஸ்காரர் உட்பட மூவர் கொல்லப்பட்டனர். 20 பேர் காயம் அடைந்தனர். [இ-10]

## லங்கா சிமெந்து ஊழியர் சம்பளம்

காங்கேசன் லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களுக்கான ஜனவரி மாதச் சம்பளம் நாளை வெள்ளிக்கிழமை முதல் சுன்னாகத்தில் உள்ள அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. [இ-3]

## இந்தியக்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயலலிதா இந்திய மத்திய அரசை வலியுறுத்தி இருந்தார்.

ஆனால் இந்திய மத்திய அரசு அதற்குச் செவிசாய்க்கவில்லை. கச்சதீவை இலங்கையிடம் ஒப்படைத்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்யப்போவதில்லை என்றும் அறிவித்திருந்தது.

ஆனால் இப்போது கச்சதீவுக் கடற் பிராந்தியத்தில் இந்தியக் கடற்படை தனது ரோந்துப் பணிகளை ஆரம்பித்துத் தீவிரமாக்கியுள்ளது.

''கச்சதீவை இலங்கைக்கு ஒப்படைத்த உடன்படிக்கையை இந்தியா ரத்துச்செய்யப்போவது இல்லை என்று அறிவிக்கப்பட்ட பின்னர், கச்சதீவு கடற் பகுதியில் இந்தியக் கடற்படை ரோந்துப் பணியை மீண்டும் ஏன் ஆரம்பித்துள்ளது?'' — இப்படி கொழும்பில் உள்ள இந்தியத் தூதரிடம் கொழும்புப் பத்திரிகையாளர் ஒருவர் கேட்டார்.

அதற்கு தூதர் திரு. என். என். ஜா பதிலளிக்கையில் கூறியதாவது:-

கச்சதீவு உடன்படிக்கையின் ஓர் பகுதியே கூட்டுரோந்துமாகும். தற்போது இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்புவதுடன் இந்திய கடற்படையின் ரோந்து சம்பந்தப்பட்டுள்ளது.

அகதிகளைக் கொண்டு வரும் கப்பல்களுக்கு இருநாடுகளின் கடற்படையினரும் பாதுகாப்பு வழங்க வேண்டியுள்ளது. திருமலை செல்லும் அகதிகள் கப்பலுக்கு இரண்டு இந்தியப் போர்க்கப்பல்களும் ஒரு இலங்கை போர்க் கப்பலும் பாதுகாப்பு வழங்குகின்றன—என்று கூறினார். (அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org